सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

முனைவர் **கிரண் பேடி** அவர்கள்

புதுச்சேரி சட்டப்பேரவையில் ஆற்றிய உரை

வேல்ராம்பட்டு ஏரி, புதுச்சேரி

24 சூலை, 2020

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

முனைவர் **கிரண் பேடி** அவர்கள்

புதுச்சேரி சட்டப்பேரவையில்
ஆற்றிய உரை

அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர். **– குறள்**

ஒவ்வொரு சொல்லின் தன்மையும் உணர்ந்துள்ள நல்ல அறிஞர்கள், அவையில் கூடியிருப்போரின் தன்மையையும் உணர்ந்து அதற்கேற்ப ஆராய்ந்து பேசுவார்கள்.

மாண்புகெழுமிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே ! மற்றும் இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களே !

வணக்கம் !

புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் 14-வது சட்டமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரின் துவக்கத்தில் உரையாற்றுவதில் நான் மிகவும் பெருமை அடைகிறேன்.

2. மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெறும் இந்த ஆட்சி புதுச்சேரி ஆட்சிப்பரப்பு மக்களின் சமூக-பொருளாதார முன்னேற்றத்தில் தொடர்ந்து கவனம் செலுத்துவதுடன் குறிப்பாக, சமூகத்தில் பின்தங்கிய மக்களின் நலனைப் பாதுகாப்பதிலும் அதிகக் கவனம் செலுத்தி வருகிறது.

மத்திய அரசு முதல் முறையாக நல்லாட்சிக்கானக் குறியீட்டை (Good Governance Index) நல்லாட்சி நாளான டிசம்பர் 25, 2019 அன்று வெளியிட்டது. அதில் நமது ஆட்சிப்பரப்பு (i) மனிதவள மேம்பாடு (ii) பொதுச் சுகாதாரம் (iii) நீதி மற்றும் (iv) சட்டம் ஒழுங்கு என நான்கு துறைகளில் முதன்மை இடத்தை பிடித்தது மட்டுமல்லாமல் மொத்தமுள்ள ஏழு யூனியன் பிரதேசங்களுக்குள் முதன்மையான இடத்தைப் பிடித்துள்ளது என்பது நம் அனைவருக்கும் பெருமை தரக்கூடியதாகும். இந்த முக்கியத்துவம் வாய்ந்த சாதனைக்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர்களையும் மற்றும் அரசு அதிகாரிகளையும் நான் மனமார வாழ்த்துகிறேன்.

3. புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் கடந்த ஆண்டு, ஒட்டுமொத்த சட்டம் ஒழுங்கு நிலை அமைதியாகவே இருந்தது என்பதைக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது மத்திய அரசின், நல்லாட்சிக்கான குறியீட்டில் புதுச்சேரிக்கு சட்டம் ஒழுங்கில் முதன்மை இடம் கிடைத்ததன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. தொடர் கண்காணிப்பு, மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் இந்த ஆட்சிப்பரப்பு முழுவதும் மத நல்லிணக்கம் தொடர்ந்து நிலவி வருகிறது.

4. கொரோனா வைரஸ் (கோவிட்-19) பரவலால் உலகம் முழுவதிலும் எதிர்பாரா விதமாக தினமும் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

இந்த வைரஸ் பரவல் நமது புதுச்சேரியின் பொருளாதாரத்திலும் அதிகப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் பொருட்டு நம் நாடு சரியான நேரத்தில் திறம்படச் செயல்பட்டதை பல உலக நாடுகளும் மற்றும் உலக சுகாதார அமைப்பும் (WHO) பாராட்டியுள்ளன. அதேபோல், இவ்வாட்சிப்பரப்பிலும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. தேசிய அளவில் ஊரடங்கு அறிவித்த ஒரு நாள் முன்பே புதுச்சேரியில் ஊரடங்கு அறிவிக்கப்பட்டு, கொரோனா எதிர்ப்புப் போரில் முன்மாதிரியாக விளங்கியது இவ்வாட்சிப்பரப்பின் சிறப்பாகும். இந்த வேளையில், உயிர்க்கொல்லி வைரஸ் பரவலை எதிர்த்துப் போராடிவரும் மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், காவல் துறையினர், வருவாய்த் துறையினர், குடிமைப்பொருள் துறையின் பணியாளர்கள், பொதுப் பணித்துறை பணியாளர்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள், மின்துறை ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், நகராட்சி ஊழியர்கள், மற்றும் இதில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் எனது நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கடும் சோதனைகள் விரைவில் முடிவுக்கு வந்து இவ்வாட்சிப்பரப்பு கோவிட்-19 நோய் பரவுதலிலிருந்து முழுமையாக விடுபடும் என்று நம்புகிறேன்.

5. நிதி மேலாண்மையைப் பொறுத்தவரையில், இந்த அரசு 2019-20ஆம் ஆண்டில் நிதி விவகாரங்களைத் திறம்படக் கையாண்டுள்ளது. 2019-20ஆம் ஆண்டின் மொத்த ஒதுக்கீடான ₹ 8,525 கோடியில் ₹ 7,927 கோடி அதாவது 93 விழுக்காடு செலவு செய்யப்பட்டுள்ளது. மார்ச் 31, 2020க்கு முன்னர் வரவேண்டிய GST இழப்பீட்டுத் தொகை சுமார் ₹ 360 கோடி உரிய நேரத்தில் வராமல் போனதே இந்தச் செலவினம் குறைந்ததற்கு முக்கிய காரணம் ஆகும்.

6. பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கும் ஒரு மிக முக்கிய நிதிக் குறியீடாக மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (GSDP) திகழ்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இவ்வாட்சிப்பரப்பின் 2019-20ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியாக ₹ 37,943 கோடி (நடப்பு விலை) என மதிப்பிடப்பட்டிருந்தது. இது கடந்த ஆண்டைவிட 10.95 விழுக்காடு கூடுதலாகும். புதுச்சேரியின் தனிநபர் வருமானம் 2018-19ஆம் ஆண்டில் ₹ 2,20,208ல் (நடப்பு விலை) இருந்து 2019-20ஆம் ஆண்டில் ₹ 2,32,057ஆக (நடப்பு விலை) உயர்ந்துள்ளது. இது 5.3 விழுக்காடு வளர்ச்சியைக் காட்டுகிறது. புதுச்சேரியின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில், அரசுக் கடன், வட்டி செலுத்துதல், நிதிப் பற்றாக்குறை, வருவாய்ப் பற்றாக்குறை, போன்ற முக்கிய காரணிகள் மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட வரம்புக்குள் (Fiscal Road Map) இந்த அரசு உறுதியாக நிர்வகித்து வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

7. இந்த அறிமுக உரையுடன், நான் 2019-20ஆம் நிதி ஆண்டில் பல்வேறு துறைகளில் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

வேளாண் மற்றும் விவசாயிகள் நலன்

8. வேளாண்மை நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், கிராமப்புறங்களில் வாழும் 70 விழுக்காடு குடும்பத்தினர் வேளாண் மற்றும் வேளாண்சார் தொழிலைச் சார்ந்து உள்ளனர். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மை 17 விழுக்காடு பங்கு வகிக்கிறது மற்றும் 60 விழுக்காட்டிற்கு அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குகிறது.

9. “பயிர் உற்பத்தித் தொழில்நுட்பத் திட்டத்தின்” கீழ் நெல் உற்பத்தி செய்திடும் விவசாயிகளுக்குச் சாகுபடிக்குப் பிந்தைய பொருளீட்டு மானியமாக சொர்ணாவாரி 2018-19 பருவத்திற்கு ₹ 1.03 கோடியும் மற்றும் சம்பா 2018-19 பருவத்திற்கு ₹ 1.62 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி பகுதியில், விவசாயிகளுக்கு ₹ 23.65 இலட்சம் அளவிற்கு வேளாண் இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. காரைக்கால் பகுதியில் குறுவை, சம்பா மற்றும் தாளடி 2018-19 பருவங்களில் நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு

அறுவடைக்குப் பிந்தைய பொருளீட்டு மானியமாக ₹ 2.12 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஏனாம் பகுதியில் நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு அறுவடைக்குப் பிந்தைய மானியமாக ₹ 11.62 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

10. வேளாண் விரிவாக்கத் துணைத் திட்டத்தின்கீழ் விவசாயிகள் சார்ந்த நடவடிக்கைகளான பயிற்சிகள், செயல் விளக்கங்கள், கண்டுணர் சுற்றுலா ஆகியவை நடத்தப்பட்டதில் புதுச்சேரியில் 1,910 விவசாயிகளும், காரைக்காலில் 2,207 விவசாயிகளும் பயனடைந்துள்ளனர். புதுச்சேரி பகுதியில் ஒருங்கிணைந்த தோட்டக்கலைப் பயிர்களுக்கான மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தோட்டக்கலை இடுபொருட்கள், மானிய விலையில் 111 விவசாயிகளுக்கும் மற்றும் திசு வளர்ப்பு வாழைக்கன்றுகள் 75 விழுக்காடு மானியத்தில் 260 விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் ₹ 56.19 இலட்சம் செலவில் பல்வேறு திட்டங்களின் மூலமாக 717 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். காரைக்கால் பகுதியில் 100 விழுக்காடு மானியத்தில் காய்கறி விதைப் பைகள் 600 பயனாளிகளுக்கு ஆடிப்பட்டத்திலும், 1,200 பயனாளிகளுக்கு தைப்பட்டத்திலும் வழங்கப்பட்டுள்ளன.

11. காய்கறி சாகுபடியில் நிலப்பரப்பை அதிகரிக்கும் விதமாக காய்கறி விதைகள் 75 விழுக்காடு மானியத்தில் 216 பொதுப்பிரிவு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மா, சப்போட்டா போன்ற 3,818 பழக்கன்றுகள் 469 பொதுப்பிரிவுப் பயனாளிகளுக்கு 75 விழுக்காடு மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. தோட்டக்கலை உபகரணங்கள் 50 விழுக்காடு மானியத்தில் 831 பொதுப்பிரிவு பயனாளிகளுக்கும், 75 விழுக்காடு மானியத்தில் 400 அட்டவணை இனப் பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. பூச்செடிகள் மற்றும் அலங்கார செடிகள் 50 விழுக்காடு மானியத்தில் 1,622 பொதுப் பிரிவு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

12. மத்திய நிதி உதவித் திட்டமான "வேளாண் இயந்திரமயமாக்கல் துணைத்திட்டத்தின்" கீழ் 25 விவசாயிகளுக்கு டிராக்டர் வாங்குவதற்காக ₹ 54.95 இலட்சமும், 6 விவசாயிகளுக்கு Rotavator வாங்குவதற்காக ₹ 2.20 இலட்சமும், 11 பவர் டில்லர்கள் வாங்குவதற்காக ₹ 7.82 இலட்சமும் மற்றும் 3 கல்டிவேட்டர்கள் வாங்குவதற்காக ₹ 1.40 இலட்சமும் மானியமாக புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் உள்ள பொது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், டிராக்டர் வாங்குவதற்காக ₹ 2.50 இலட்சமும், பவர் டில்லர் வாங்குவதற்காக ₹ 85,000மும், Rotavator வாங்குவதற்காக ₹ 45,000மும், கல்டிவேட்டர் வாங்குவதற்காக ₹ 50,000மும், நெல் நடவு இயந்திரம் வாங்குவதற்காக ₹ 1.07 இலட்சமும் மானியமாக சில அட்டவணை இன விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

13. “ஒருங்கிணைந்த நிலத்தடி நீர் மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்” திட்டத்தின்கீழ், 65 விழுக்காடு மானியத்தில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு 27 பொது விவாசாயிகளுக்கு ₹ 37.47 இலட்சமும், 90 விழுக்காடு மானியத்தில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு 3 அட்டவணை இன விவசாயிகளுக்கு ₹ 4.48 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

14. மத்திய அரசின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (PMFBY) புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. கடன் பெறாத விவசாயிகளையும், பயிர்க் காப்பீடு செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் மாநில அரசு செலுத்திடும் சந்தா தொகையுடன், புதுச்சேரியில் உள்ள அனைத்து விவசாயிகள் செலுத்தவேண்டிய சந்தா தொகையையும் சேர்த்தே புதுச்சேரி அரசே செலுத்துவதால் புதுச்சேரி அரசு இத்திட்டத்தில் தேசிய அளவில் ஒரு முன்னோடி அரசாகத் திகழ்ந்து வருகிறது. இந்தப் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் புதுச்சேரியில் 3,097 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்த 4,125 விவசாயிகளும், காரைக்கால் பகுதியில் 3,808 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்த 4,301 விவசாயிகளும் பதிவு செய்துள்ளனர். ஏனாம் பகுதியில், காரிப் 2018 பருவத்தில் மகசூல் இழந்த 468 விவசாயிகள் பயனடையும்

வகையில் தேசிய காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து ₹ 45.22 இலட்சம் பயிர் காப்பீட்டுத் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

15. தேசிய வேளாண் விளைபொருட்கள் சந்தைத் திட்டத்தின் கீழ் (e-NAM) கைபேசி செயலி (Mobile App.) மூலம் நெல் அல்லாமல் உளுந்து, பச்சைப்பயறு, திணை, கேழ்வரகு மற்றும் கம்பு ஆகிய பயிர்களுக்கு இணையதளம் வாயிலாக வர்த்தகம் நடைபெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 92 உரிமம் பெற்ற வியாபாரிகளும், 8,500 விவசாயிகளும் இந்த இணையதளத்தில் பதிவு செய்துள்ளனர். மின்னணு எடை மேடைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. மின்னணு விலைப் பலகைகள் (Electronic Sticker Boards) மற்றும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. புதுச்சேரி தேசிய வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்தும் மண்டி தென்னிந்தியாவிலேயே அருகலை (Wi-fi) வசதி செய்யப்பட்டுள்ள முதல் விற்பனை மண்டியாகும். விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் இவ்வசதியினைப் பயன்படுத்தி தகவல்களை இலவசமாகப் பெற்றுப் பயனடைய முடியும்.

16. பாரதப் பிரதமரின் விவசாயிகளுக்கு நிதி வழங்கும் திட்டம் (PM-KISAN) பிப்ரவரி 24, 2019 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் தேசிய அளவில் துவக்கிவைக்கப்பட்ட

அன்றே புதுச்சேரியிலும் வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் விவசாய நிலம் உள்ள ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் நிதி உதவியாக ஆண்டிற்கு ₹ 6,000 வழங்கப்படுகிறது. இதுவரை, 9,911 விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலன்

17. இவ்வாட்சிப்பரப்பில் கால்நடை மருந்தகங்கள் மற்றும் கிளை நிலையங்கள் மூலமாக அனைத்து கால்நடை சேவைகளும் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன. 2019-20ஆம் ஆண்டில் 2,71,501 கால்நடைகள், கோழிகள் மற்றும் செல்லப் பிராணிகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 1,10,728 கால்நடைகள், கோழிகள் மற்றும் செல்லப் பிராணிகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் நம் விருப்பத்திற்கேற்ப உயர் ரக கலப்பினக் கால்நடைக் கன்றுகளை உற்பத்தி செய்ய 59,846 செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டு, இதன் மூலம் 20,975 உயர் ரக மரபு கூற்றைக் கொண்ட கலப்பின கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 49,500 மெட்ரிக் டன் பால், 113.78 இலட்சம் முட்டைகள் மற்றும் 14,635 மெட்ரிக் டன் இறைச்சி ஆகியவை 2019-20ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

கலை மற்றும் பண்பாடு

18. 139 உள்ளூர் எழுத்தாளர்கள் எழுதிய கலை மற்றும் இலக்கியம் சார்ந்த நூல்களைப் பதிப்பதற்காக நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. மகாகவி பாரதியார் பிறந்த தினத்தன்று 10 தமிழ் எழுத்தாளர்களுக்கு "கம்பன் புகழ் விருதுகள்" வழங்கப்பட்டன. கலாச்சாரம் மற்றும் மொழியியல் துறை சம்பந்தப்பட்ட 27 ஆராய்ச்சி அறிஞர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

19. உள்ளூர் மக்களுக்கு மட்டுமல்லாமல், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும், மற்றும் உள்ளூர் கலைஞர்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும், கடற்கரையில் வார இறுதிக் கலை நிகழ்ச்சிகள் ஞாயிற்றுக்கிழமைகளில் சுற்றுலாத் துறையுடன் இணைந்து நடத்தப்பட்டு வருகின்றன. புதுச்சேரி கலை விழா, கோடை விழா, தேசிய நாடக விழா, சாதனா சம்ஸ்கிருதி யுவ மகாத்ரம் போன்ற பெரு விழாக்கள் தஞ்சை தென்னகப் பண்பாட்டு மையத்தின் துணையோடு உள்ளூர் கலைக்குழுக்கள் மற்றும் தேசிய கலைஞர்களின் பங்கேற்புடன் கொண்டாடப்பட்டன. "ஒரே பாரதம் வலிமையான பாரதம்" திட்டத்தின் ஒரு பகுதியாக டாமனிலிருந்து 40 இளைஞர்கள் 2019ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் கலாச்சாரப் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் புதுச்சேரிக்கு வருகை புரிந்தனர். அரியாங்குப்பத்தில் உள்ள தாகூர் கலாச்சார மையம் முடியும் தருவாயில் உள்ளது. இது பிப்ரவரி 2021ஆம் ஆண்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்

20. பொது விநியோகத் திட்டத்தின் மூலம் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில், கடந்த செப்டம்பர் 2015 முதல் இந்த அரசு தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டம் 2013-ன்கீழ் நேரடிப் பணப் பயன் வழங்கும் திட்டத்தை இவ்வாட்சிப்பரப்பின் அனைத்து வட்டாரப் பகுதிகளிலும் செயல்படுத்தி வருகிறது. இந்தப் பண மானியம், பயனாளிகளின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. மிகவும் ஏழ்மை நிலையில் (AAY) உள்ள குடும்ப அந்தியோதயா அட்டைதாரர்களுக்கு, அட்டை ஒன்றுக்கு 35 கிலோ அரிசிக்கான பண மானியமாக ₹ 1050.70ம், வறுமைக் கோட்டிற்குக் (BPL) கீழ் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு 5 கிலோ அரிசிக்கான பண மானியமாக ₹ 150.10ம் மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

21. மாநில அரசின் இலவச அரிசி திட்டத்தின்கீழ், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மாதந்தோறும் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள/வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் 20 கிலோ அரிசிக்கான பண மானியம் ₹ 600ம், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் 10 கிலோ அரிசிக்கான பண மானியம் ₹ 300ம்

அட்டைதாரர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடிப் பணப் பயன் வழங்குதல் (DBT) முறையில் ஏப்ரல் 2019ல் இருந்து செலுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் மாதந்தோறும் 3.43 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயனடைகிறார்கள். இதற்கான செலவினம் மாதம் ₹ 16 கோடி என ஒரு வருடத்திற்கு மொத்தம் ₹ 192 கோடி ஆகும்.

22. கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் விதமாக மத்திய அரசு நாடுதழுவிய முழு ஊரடங்கை அறிவித்ததன் காரணமாக மக்கள் தங்களின் வீட்டுக்குள்ளேயே இருக்குமாறும் மற்றும் சமூக விலகலைக் கடைப்பிடிக்கவும் அறிவுறுத்தப்பட்டனர். இந்த முழு ஊரடங்கு காலத்தில் ஏழைகள் மற்றும் தொழிலாளர்களின் துன்பத்தைப் போக்கும் விதமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன்படி, உடனடி நிவாரணமாக ₹ 2,000 ரொக்கம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களுடைய வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டது. அதன்படி இவ்வாட்சிப்பரப்பில் வசிக்கும் 3,44,701 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர். இதனால் அரசுக்கு ₹ 68.16 கோடி கூடுதல் செலவாகியுள்ளது. மேலும் கட்டட தொழிலாளர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ₹ 2,000 கூடுதலாக வழங்கப்பட்டது. அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலனைக் காக்க அவர்கள் வங்கிக் கணக்கில் ஒவ்வொரு குடும்ப அடைதாரர்களுக்கும் ₹ 1,000 சேர்க்கப்பட்டது. புதுச்சேரி, மற்றும்

காரைக்கால் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு ₹ 5,000 மானியம் வழங்கப்பட்டது. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மானியத்துடன் வங்கிக் கடன் வழங்கப்பட்டது.

கூட்டுறவு

23. கூட்டுறவு நிறுவனங்கள் பொருளாதார மேம்பாட்டில் குறிப்பாக கிராமப்புற வளர்ச்சியில் தொடர்ந்து முக்கியப் பங்காற்றி வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்களை வலுப்படுத்தும் விதமாக இந்த அரசு ஒவ்வொரு ஆண்டும் நிதி உதவி வழங்கிவருகிறது. 2019-20ஆம் ஆண்டில் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கும் மற்றும் இரண்டு நூற்பாலைகளுக்கும் மூலதனப் பங்காக ₹ 5.30 கோடி வழங்கப்பட்டுள்ளது. நெசவாளர் நலத்திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு பாண்டெக்ஸ் நிறுவனத்துக்கு நிதி உதவியாக ₹ 1.21 கோடி வழங்கப்பட்டுள்ளது. நியாயவிலைக் கடைகளுக்கு 2018-19ஆம் ஆண்டின் மானிய நிதி உதவியாக ₹ 3.78 கோடி கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு மானியக் கொடையாக ₹ 15 கோடி வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி கூட்டுறவு சர்க்கரை ஆலையைக் குத்தகைக்கு விடுவது தொடர்பான பணியைக் கண்காணிக்கவும் மற்றும் செயல்படுத்தவும் ஒப்பந்தப்புள்ளி கோரும் குழு ஒன்று அமைக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

24. காரைக்கால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் குளிரூட்டும் வசதி மற்றும் பால் பதனிடும் பிரிவினை விரிவுபடுத்தி / மேம்படுத்துவதற்கான திட்டத்தைச் செயல்படுத்த மத்திய ஊக்குவிப்புத் திட்டமான தேசிய விவசாய மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ₹ 22.50 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி கூட்டுறவு கட்டட மையத்தின் ஒரு புதிய கிளை திருபுவனையிலுள்ள மண்ணாடிப்பட்டு கொம்யூன் பஞ்சாயத்து கட்டட வளாகத்தில் திறக்கப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வி

25. அனைத்து நன்மேலாண்மைக் குறியீடு அடிப்படையில், நாட்டில் உள்ள அனைத்து யூனியன் பிரதேசங்களிலும் நமது புதுச்சேரி மாநிலம் நாட்டிலேயே மனிதவள மேலாண்மையில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சமீபத்தில், “தரமான கல்வி” என்ற அடிப்படையில் மத்திய திட்டக்குழு (நிடி ஆயோக்) நிலையான வளர்ச்சி இலக்குகள் – இந்தியக் குறியீடு (Sustainable Development Goals - SDG - India Index) என்ற தலைப்பில், மாநிலங்களுக் கிடையேயான தர வரிசையை வெளியிட்டது. இத்தர வரிசையில் இந்தியாவில் உள்ள யூனியன் பிரதேசங்களுக்கிடையே நமது புதுச்சேரி, இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மத்திய

மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் வெளியிடப்படும் செயல்திறன் தரநிர்ணயக் குறியீட்டில் (Performance Grading Index-PGI) நமது புதுச்சேரி மாநிலம் மொத்த மதிப்பெண்ணான ஆயிரத்திற்கு 785 மதிப்பெண்கள் பெற்றுள்ளது. இது முன்னர் நமது புதுச்சேரி பெற்ற மதிப்பெண்களைவிட 14 விழுக்காடு அதிகம். கல்வி நிர்வாக நடைமுறைகள் என்ற பிரிவில் கல்வித்துறையில் சிறப்பான நிர்வாகத்துக்காக அதிகப்படியான மதிப்பெண்கள் புதுச்சேரி மாநிலத்துக்கு கிட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

26. எழுத்தறிவு மற்றும் கல்வி, சமூக நலனைப் பேணுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. சிறந்த கல்வி அறிவு வாழ்க்கைத்தரம் உயரவும், சமூக முன்னேற்றத்திற்கான மையக் கருவியாகவும் திகழ்கிறது. கல்வி கற்றலுக்கு உகந்த சூழலை ஏற்படுத்தும் விதமாக, இந்த அரசு பல்வேறு திட்டங்களை / நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் சிலவற்றை நான் கீழே விவரிக்க விரும்புகிறேன்:

(i) சத்தான மதிய உணவு அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறது. இதன் மூலம் சுமார் 70,100 மாணவர்கள் பயனடைகின்றனர். புதுச்சேரியில் பயிலும் 50,000 பள்ளி மாணவர்களுக்கு சுகாதாரமான மதிய உணவினை வழங்கும் வகையில் அட்சயப் பாத்திரம் என்னும்

தன்னார்வத் தொண்டு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் இந்த கல்வி ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

(ii) அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் காலையில் பால் வழங்கப்படுகிறது. இதன் மூலம் சுமார் 57,700 மாணவர்கள் பயனடைகின்றனர்.

(iii) பொருளாதாரத்தில் பின் தங்கிய இதர வகுப்பு (OEBC) மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகைத் (Scholarship) திட்டத்தின்கீழ் சுமார் 21,043 மாணவர்கள் பயனடைகின்றனர் மற்றும் பல்வேறு கல்வி உதவித்திட்டங்களின்கீழ் சுமார் 23,083 மாணவர்கள் பயனடைகின்றனர்.

(iv) பத்தாம் வகுப்பு மாணவர்கள் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதை உறுதிசெய்யும் வகையில் “சிகரத்தை நோக்கி” என்ற வழிகாட்டி புத்தகம் தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

(v) அதே போல், மேல்நிலைப் பொதுத்தேர்விற்கு மாணவர்கள் தங்களைத் திறம்பட தயார் செய்து கொள்வதற்காக “வெற்றி நமதே” என்ற வழிகாட்டி

புத்தகம் கலை மற்றும் அறிவியல் பாடப் பிரிவில் பயிலும் பதினோராம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(vi) 2019-20ஆம் கல்வியாண்டில் மடுகரை அரசு பெண்கள் உயர் நிலைப்பள்ளி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

(vii) கடந்த கல்வியாண்டில் ஏனாம் கிர்ரம்பேட்டாவில் உள்ள ரக்ஷா அரிகிஷ்ணா அரசு உயர் நிலைப் பள்ளி, அரசு மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

(viii) தேசிய அளவிலான கண்காட்சி மற்றும் செயல்திட்டப் போட்டிகளில் பங்கேற்ற 2 மாணவர்கள் ஒரு வாரகால பயணமாக ஜப்பானுக்கு 2019, ஏப்ரல் 21 முதல் 27 வரை சென்றுவர தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

(ix) பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் கிராமப்புறங்களில் 90 விழுக்காட்டிற்கு மேலும், நகர்ப் புறங்களில் 100 விழுக்காடு தேர்ச்சியும் கொடுத்த 53 அரசுப் பள்ளிகளுக்கு ஊக்கத்தொகையாக ₹ 1.06 கோடி வழங்கப்பட்டுள்ளது.

(x) புதுச்சேரி, காலாப்பட்டில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் மற்றும் அரியாங்குப்பம், மணவெளியில் உள்ள தந்தை பெரியார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் அட்டல் சீராக்க அறிவியல் ஆய்வுக் கூடங்கள் (Atal Tinkering Laboratories) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், மூன்றாவதாக ஒரு ஆய்வுக்கூடம் கலிதீர்த்தாள்குப்பம், கலைஞர் கருணாநிதி அரசு மேல்நிலைப்பள்ளியில் ₹ 20 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(xi) மாணவர் சமுதாயத்தின் நலனைப் பேணும் வகையில், ஆரம்பக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை 520 ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

(xii) சிலம்பாட்டம், தற்காப்புக் கலை, பொம்மலாட்டம், இசைக்குழுப் போட்டி மற்றும் யோகா ஆகிய குழு நிகழ்ச்சிகள் மாணவர்களால் நிகழ்த்தப்பட்டன. வாசித்தல் திருவிழா, கலை மற்றும் கைவினைப் பொருட்கள், அறிவியல் அரங்கு, ஒரே பாரதம் சிறந்த பாரதம் போன்ற கல்வி சார்ந்த அரங்குகள் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் அமைக்கப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்

27. புதுச்சேரியில் சாரதாம்பாள் நகரில், அகில உலகத் தரத்தில் ஒரு நீச்சல் குளம், “கேலோ இந்தியா” திட்டத்தின்கீழ், ₹ 5 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது. இதன் கட்டுமானப் பணிகள் வரும் 2020, டிசம்பர் மாதத்தில் முடிக்கப்பட்டு, நீச்சல் வீரர்களின் பயன்பாட்டிற்கு வர இருக்கிறது. அதேபோல், புதுச்சேரியில், உப்பளத்தில் உள்ள, இந்திராகாந்தி விளையாட்டு வளாகத்தில், தடகள விளையாட்டுக்கான செயற்கை ஓடுகளம், ₹ 7 கோடி செலவில் கட்டப்பட்டு இந்த ஆண்டிற்குள் செயல்பாட்டிற்கு வர இருக்கிறது. இந்தக் கட்டுமானப் பணிக்கான பொறுப்பு மத்திய பொதுத்துறை நிறுவனமான “வேப்காஸ்” இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பள்ளிகளுக்கான 65வது தேசிய அளவிலான 19 வயதுக்குக் கீழுள்ள ஆண்களுக்கான கூடைப்பந்து போட்டிகள் 2019-20. கடந்த 2019 நவம்பர் மாதம் 26ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை ஏனாமில் நடைபெற்றது. இதில் நாடெங்கிலும் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து 29 அணிகள் ஆர்வத்துடன் பங்கேற்றன.

28. 2019-20ஆம் ஆண்டுக்கான 65வது பள்ளிகளுக்கு இடையேயான தேசிய விளையாட்டுப் போட்டிகளில் நமது புதுச்சேரி பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு 3 தங்கம் மற்றும் 8 வெள்ளிப் பதக்கங்களை வென்றனர். 2019 ஜனவரி மாதத்தில்,

அஸ்ஸாம் மாநிலம் கௌஹாத்தியில் நடைபெற்ற கேலோ இந்திய இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் நமது புதுச்சேரியில் இருந்து ஆண் பெண் உட்பட மொத்தம் 56 விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர். இதில் செல்வி ஸ்ரீமதி பளு தூக்கும் போட்டியில் கலந்துகொண்டு நமது புதுச்சேரிக்கு முதல் சாதனையாக வெண்கலப் பதக்கம் பெற்றுத் தந்தார். இந்திய விமான நிலைய அதிகாரத்தின் சமூகப் பொறுப்புணர்வு நிதி திட்டத்தின் (CSR Programme) புதுச்சேரியில் உள்ள கிராமப்புற பகுதிகளில் பல்நோக்கு சிறு உள்விளையாட்டரங்கம் கட்டப்பட உள்ளது. ஏனாம், கனக்கல்பேட்டாவில் கட்டப்பட்டு வரும் இந்த உள்விளையாட்டு அரங்கப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி பணிகள் நடைபெற்று வருகின்றன.

உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி

29. முறையான கல்வி கற்றலில் உயர்கல்வி இறுதியான நிலையாகும். இது வளமான வாழ்க்கை மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு போன்ற பயன்களை அளிக்கிறது. மேலும், இது ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான வாய்ப்பை அதிகரிக்கிறது. இவ்வாட்சிப்பரப்பு, அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் எனப் பல உயர் கல்வி நிறுவனங்களின் இருப்பிடமாகத் திகழ்கிறது. இதில் புதுவை ஆட்சிப்பரப்பைச் சேர்ந்த

மாணவர்கள் அதிகப் பயன் பெறுகின்றனர் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கனவே அறிவர். பல்கலைக்கழக மானியக்குழு (UGC) மற்றும் அனைத்து இந்திய தொழில்நுட்ப கல்விக்கான அமைப்பு ஆகியவற்றின் பரிந்துரைகளின்படி அரசு உதவிபெறும் கல்லூரிகளின் நீண்ட நாள் கோரிக்கையான 7வது மத்திய ஊதியக் குழு சம்பள விகிதங்கள் கடந்த ஆண்டு அமல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக அரசுக்கு ஒரு வருடத்திற்கு ₹ 43 கோடி கூடுதல் செலவாகிறது.

30. கலை மற்றும் அறிவியல் படிப்புகளுக்கான தேவைகள் சமீபகாலமாக அதிகரித்துள்ளமையால், இளங்கலைப் படிப்புகளில் 1,086 இடங்களும் மற்றும் முதுகலைப் படிப்புகளில் 125 இடங்களும் கடந்த ஆண்டு உயர்த்தப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டுகால இந்த ஆட்சியில் கலை மற்றும் அறிவியல் சார்ந்த பட்டப்படிப்புக்கான இடங்களை அரசுக் கல்லூரிகளில் 2,962லிருந்து இருமடங்குக்கும்மேல் 5,939 இடங்களாக உயர்த்தி சாதனை படைக்கப்பட்டுள்ளது என்பதை நான் மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த நான்கு ஆண்டுகளில் மேற்படி அதிகரிக்கப்பட்ட 2,977 இடங்கள் என்பது 100 விழுக்காடு உயர்வு ஆகும். அதே போன்று கலை மற்றும் அறிவியல் சார்ந்த பட்டமேற்படிப்புக்கான இடங்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் 605லிருந்து 1,005 ஆக உயர்த்தப்பட்டுள்ளன. இது 67 விழுக்காடு உயர்வு ஆகும்.

31. புதுச்சேரி யூனியன் பிராந்தியத்தை சேர்ந்த நான்கு கல்லூரிகள், தரவரிசைக் கட்டமைப்பிற்கான தேசிய நிறுவனத்தால் 2019இல் வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் பெற்றுள்ள இடங்கள் பின்வருமாறு:-

(i) புதுச்சேரியில் உள்ள பாண்டிச்சேரி பொறியியல் கல்லூரி பொறியியல் கல்லூரிகளின் தரவரிசையில் 969 கல்லூரிகளில் 76வது இடமும்,

(ii) புதுச்சேரியில் உள்ள காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் தரவரிசையில் 1,304 கல்லூரிகளில் 49வது இடத்திலும்,

(iii) புதுச்சேரியில் உள்ள இந்திரா காந்தி கலை & அறிவியல் கல்லூரி மற்றும் மாகியில் உள்ள மகாத்மா காந்தி அரசு கலை கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் தரவரிசையில் 1,304 கல்லூரிகளில் 101-105வது இடங்களைப் பிடித்துள்ளன.

32. ஏனாம் டாக்டர் சர்வப் பள்ளி ராதாகிருஷ்ணன் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கடந்த ஆண்டு புதிதாக முதுநிலை அறிவியல் (வேதியியல்) படிப்பு

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஏனாம் டாக்டர் அம்பேத்கர் பாலிடெக்னிக் கல்லூரியில் கடந்த ஆண்டு இயந்திரவியல் பட்டயப்படிப்பு (Diploma in Mechanical Engineering) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாலிடெக்னிக் கல்லூரியில் நடத்தப்படும் மின்னணு தொடர்பு இயந்திரவியல் பட்டயப்படிப்பு (Diploma in ECE) தேசிய மதிப்பீட்டு வாரியத்தால் (National Board of Accrediation) அங்கீகரிக்கப்பட்ட புதுவை ஆட்சிப்பரப்பிலுள்ள அனைத்து பாலிடெக்னிக் கல்லூரிகளையும் உள்ளடக்கிய, ஒரே பட்டயப் படிப்பாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

33. பாண்டிச்சேரி பொறியியல் கல்லூரியை புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழக சட்ட மசோதா புதுச்சேரி சட்டசபையில் ஆகஸ்ட் 2019ல் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்த தொழில்நுட்ப பல்கலைக்கழகம் விரைவில் செயல்படத்துவங்கும். பெருந்தலைவர் காமராஜர் நிதி உதவித் திட்டத்தின்கீழ் 2019-20ஆம் ஆண்டில் தொழிற்கல்வி பயில்வதற்காக 4,802 மாணவர்களுக்கு ₹ 15.88 கோடி வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஆசிரியர் பதவியிடங்கள் மறுகட்டமைப்பு செய்யப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் 200 ஆசிரியர்களுக்கு மேல் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், அனைத்துக் கல்லூரிகளிலும்

நூலகர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர்கள் கடந்த ஆண்டு நியமிக்கப்பட்டனர். ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்குப்பிறகு முதல்முறையாக கல்லூரி மாணவ மாணவிகளுக்கிடையே விளையாட்டு மற்றும் கலாச்சார போட்டிகள் கடந்த 2020 பிப்ரவரியில் நடத்தப்பட்டன. இது மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்களிடையே மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது.

மின்விசை

34. இவ்வாட்சிப்பரப்பில், தடையில்லா மின்சாரம் வழங்குதலை உறுதிப்படுத்தும் விதமாக மின்சார உள்கட்டமைப்புகளை மேம்படுத்த இந்த அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இரண்டு 110/22 கிலோ வோல்ட் 25MVA திறன் கொண்ட மின்மாற்றிகள் மற்றும் எட்டு 22 கிலோ வோல்ட் மின் வழித்தடங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களை உள்ளடக்கிய ஒரு 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையம், புதுச்சேரி, தொண்டமாநத்தத்தில் ₹ 11.65 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு தொழில்நுட்ப முறையில் இயக்கிவைக்கப்பட்டது. பின்னாச்சிகுப்பம் மற்றும் பாகூர் 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திற்கும் இடையே புதிய 110 கிலோ வோல்ட் மின் இணைப்புப் பாதை ₹ 78.10 இலட்சம் செலவில் இயக்கிவைக்கப்பட்டுள்ளது.

35. வெவ்வேறு திறன்கள் கொண்ட 77 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு அவற்றின் திறன்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. 13 கிலோமீட்டர் உயர்மின் அழுத்தப் பாதைகளும், 29 கிலோ மீட்டர் குறைந்தமின் அழுத்தப் பாதைகளும், புதியதாக அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 6 கிலோ மீட்டர் உயர்மின் அழுத்தப் பாதைகளின் திறனும், 7 கிலோ மீட்டர் குறைந்தமின் அழுத்தப் பாதைகளின் திறனும் அதிகரிக்கப்பட்டுள்ளன. 8,932 வீடுகளுக்கும், 1,226 வர்த்தக நிறுவனங்களுக்கும், 23 வேளாண் பம்பு செட்டுகளுக்கும் மற்றும் 242 தெரு விளக்குகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. புதை மின்வடம் மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ், 2 கிலோ மீட்டர் தூரம் வரை புதைமின் வடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 13,000 பழுதான மின் அளவிகள் (Meters), இயல் ஆற்றல் மின் அளவிகளாக (Static Meters) மாற்றப்பட்டுள்ளன.

36. மின்சக்தி மேம்பாட்டுச் சீர்திருத்தத் திட்டத்தின்கீழ் (R-APDRP), புதுவையிலுள்ள நகர்ப்புற மின் பகிர்மான கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகள் ₹ 62 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், இரண்டு புதிய 25 MVA திறன் கொண்ட மின்மாற்றிகள் குரும்பாபேட் மற்றும் வில்லியனூர் துணைமின் நிலையங்களிலும், மற்றும் பல்வேறு பகுதிகளில் 184 பகிர்மான மின்மாற்றிகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 42,500 ஒரு முனை மற்றும் மும்முனை மின்

அளவிகள் (Meters), நிறுவப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த மின் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ₹ 21.63 கோடி திட்ட செலவில் புதுவை பிராந்தியத்தில் உள்ள நகரப் பகுதிகளில் மின் பகிர்மான கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. 100KW சூரிய மின் உற்பத்தி மேல்தள பேனல்கள் புதுவை, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

37. தீன தயாள் உபாத்யாயா கிராம ஜோதி யோஜனா திட்டத்தின்கீழ், புதுவை மற்றும் காரைக்கால் கிராமப் பகுதிகளில் துணைப் பரிமாற்றத்தை வலுப்படுத்துதல், பகிர்ந்தளித்தல் மற்றும் மின் அளவிகளைப் பொருத்தும் பணிகள் ₹ 20.05 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மின் அமைப்பு மேம்பாட்டு நிதி நிறுவனத்தின் மூலம் (Power System Development Fund), புதுச்சேரியில் உள்ள துணைமின் நிலையங்களின் மின்சார வினியோக அமைப்பின் கட்டமைப்பை மேம்படுத்தும் பொருட்டு, 230 கிலோ வோல்ட் வில்லியனூர் மற்றும் பாகூர் துணை மின் நிலையங்களைப் புதுப்பித்தல் மற்றும் நவீன மயமாக்கும் பணிகள் ₹ 10.56 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மீன்வளம் மற்றும் மீனவர் நலன்

38. இந்த அரசு, புதுவை மாநிலத்தின் கடல் வளத்தைப் பயன்படுத்தி மீனவ சமுதாயத்தின் சமூக மற்றும் பொருளாதார நிலையைப் மேம்படுத்த தொடர்ந்து பல்வேறு

திட்டங்களை உறுதியாக செயல்படுத்தி வருகிறது. மேலும், கடல் நுட்பங்கள் பற்றி அறிவதை ஊக்கப்படுத்தி அதன் மூலம் மீனவர்கள் நிலையான வாழ்வாதாரத்தைப் பெறவும் உறுதி பூண்டுள்ளது. 2019-20ஆம் ஆண்டில் மீனவ சமூகத்திற்கு வழங்கப்பட்ட சில நலத்திட்டப் பயன்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

(i) புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் 61 நாட்கள் மீன்பிடித் தடைக்கால நிவாரணமாக 17,003 மீனவக் குடும்பங்களுக்குத் தலா ₹ 5,500 வீதம் ₹ 9.35 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதே போல், மாஹே பகுதியில் 52 நாட்கள் மீன்பிடித் தடைக்கால நிவாரணமாக 549 மீனவக் குடும்பங்களுக்கு தலா ₹ 4,690 வீதம் ₹ 25.75 இலட்சம் வழங்கப்பட்டது.

(ii) 8,091 மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த முதியோர்களுக்கு மாதாந்திர ஓய்வுதியமாக மொத்தம் ₹ 20.40 கோடி வழங்கப்பட்டது.

(iii) பதிவு பெற்ற மீன்பிடிப் படகுகளைப் பராமரிக்கும் பொருட்டு, 374 இரும்பு / கண்ணாடி நுண்ணிழை / மரத்திலான விசைப்படகுகளுக்கு ₹ 20,000 வீதம் ₹ 74.80 இலட்சமும், 73 கண்ணாடி நுண்ணிழைப் படகுகளுக்கு ₹ 10,000 வீதம் ₹ 7.30 இலட்சமும் என ₹ 82.10 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டது.

(iv) பதிவுபெற்ற மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்கள் தங்களுடைய மீன்பிடிப் படகுகளைக் காப்பீடு செய்வதற்காகச் செலுத்தும் வருடாந்திரக் காப்பீட்டுச் சந்தா தொகையில் 75 விழுக்காடு மானியமாக ₹ 10.37 இலட்சம் வழங்கப்பட்டது.

(v) பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 75 விழுக்காடு மற்றும் அதற்குமேல் மதிப்பெண் பெற்ற 380 சிறந்த மீனவ சமுதாய மாணவர்களுக்கு ரொக்கப் பரிசாக ₹ 21.28 இலட்சம் வழங்கப்பட்டது.

(vi) மீனவர்களுக்கான "சேமிப்பு மற்றும் நிவாரண நிதி" திட்டத்தின்கீழ், 2018-19ஆம் ஆண்டில் 15,066 மீனவப் பயனாளிகளுக்கு தலா ₹ 3,000 வீதம் ₹ 4.52 கோடி வழங்கப்பட்டது.

வனம் மற்றும் வனவிலங்கு

39. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதில் காடுவளர்ப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. சமூகக் காடுவளர்ப்பை ஊக்கப்படுத்தும் விதமாக, புதுச்சேரியில் உள்ள சாலைகள், ஏரிக்கரைகள், கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் விவசாய நிலங்கள் ஆகியவற்றில் சுமார் 32,000 மரக்கன்றுகள் நடப்பட்டு

வருகின்றன. பொதுமக்கள், பள்ளிகள், அரசு சாரா நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசு துறைகள் போன்றவற்றிக்கு சுமார் ஒரு இலட்சம் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன. கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 10,018 ஆமை முட்டைகள் சேகரிக்கப்பட்டு, அதன் வாழ்விடத்திற்கு ஏற்ற சூழ்நிலை அமைந்துள்ள நல்லவாடு மற்றும் பன்னித்திட்டுப் பகுதியில் உள்ள மையத்தில் அவை பராமரிக்கப்பட்டு, அதில் 9,147 ஆமைக் குஞ்சுகள் வங்காள விரிகுடாக் கடலில் விடுவிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரம் மற்றும் குடும்ப நலன்

40. உயிர்க்கொல்லி கொரோனா வைரஸை எதிர்த்து போராடுவதில் சுகாதாரத்துறை முழு உத்வேகத்துடன் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும், இந்த கொரோனா நோய்த் தொற்று காலத்திலும், களப்பணியில் தங்களை ஈடுபடுத்தி அயராமல் உழைப்பது பொதுமக்களுக்கும், கொரோனாவுக்கு எதிராக போராடும் அரசு ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கும் புதிய உத்வேகத்தை அளித்துள்ளது. முன்பே என்னுடைய அறிமுக உரையில் குறிப்பிட்டதுபோல், இந்த யூனியன் பிரதேசத்தில் கோவிட்-19க்கு எதிராகப் போராடிவரும் சுகாதாரப் பணியாளர்களின் வியத்தகு பங்களிப்பு பாராட்டத்தக்கது. தங்களின் உயிரைப் பணையம் வைத்து இந்தக் கடினமான பணியில் தங்களை

ஈடுபடுத்திக்கொண்டுள்ள அனைவரையும் நான் மறுபடியும் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். இப்பணிக்குத் தேவையான உபகரணங்கள், முகக் கவசங்கள் வாங்கத் தாமதமில்லாமல் மார்ச் 2020ல் ₹ 7.50 கோடியை அரசு வழங்கியுள்ளது. இந்தத் தொற்றுப் பரவலைத் தடுக்கும் விதமாக தினந்தோறும் கூடுதல் சோதனைகளைச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. கோவிட்-19 வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருப்பதால் மக்கள் அத்தியாவசிய தேவைகளைத் தவிர வெளியில் வருவதை கண்டிப்பாகத் தவிர்க்கவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

41. நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வின்படி, இவ்வாட்சிப்பரப்பு யூனியன் பிரதேசங்களுக்கிடையில் சுகாதாரத் துறையில் முதலிடத்தில் திகழ்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர், சுகாதாரத் துறை அமைச்சர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் சுகாதாரத் துறை ஊழியர்கள் அனைவருக்கும் என் பாராட்டினை தெரிவித்துக்கொள்கிறேன்.

42. நரம்பியல் பிரிவில் அனைத்து பக்கவாத நோயாளிகளுக்கும் குறிப்பாக மூளையில் ரத்தநாள அடைப்பின் காரணமாக பக்க வாதத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு

சிறப்பு கவனம் செலுத்தும் விதமாக மேம்பட்ட சுகாதார வசதிகள் வழங்கும் பொருட்டு ஒரு தனி பக்கவாத தீவிர சிகிச்சை பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு உதவ பிரத்யேகமான தனி வார்டு இந்திராகாந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்ட மேற்படிப்பு நிறுவனத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

43. அன்னை தெரேசா பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் பிசியோதெரபி இளங்கலையில் (BPT) மாணவர்கள் சேர்க்கை இடங்கள் 16லிருந்து 30ஆகவும், B.Sc., (MLT) மாணவர்களின் சேர்க்கை 12லிருந்து 30ஆகவும், B.Sc., (MRIT) பாடப்பிரிவில் 15லிருந்து 20ஆகவும், 2019ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளன.

44. உயர் சிகிச்சை மருத்துவமனைகளில் சிறப்பு சிகிச்சை பெறுவதற்கு ஏதுவாக ஏழை நோயாளிகளுக்கு நிதி உதவி வழங்க புதுச்சேரி மருத்துவ நிவாரண சங்கம், “மாநில நோய் நிதி உதவி” என்னும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்தின்கீழ் ₹ 1.52 கோடி செலவு செய்யப்பட்டு 219 நோயாளிகள் பயனடைந்துள்ளனர். சென்னை, பிரான்டியர் லைப்லைன் மருத்துவமனையுடன் ஒருங்கிணைந்து இந்திராகாந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்ட மேற்படிப்பு நிறுவனத்தில் இருதய அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகின்றன. இதுவரையில்,

186 இருதய அறுவை சிகிச்சைகள் பணமில்லா மருத்துவ சிகிச்சை அடிப்படையில் வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டுள்ளன. அதில் 16 இருதய அறுவை சிகிச்சைகள் 2019-20ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டவை.

45. ஆயுஷ்மான் பாரத் - பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தின்கீழ், ஏழை எளிய மக்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ சேவையை (Secondary and Tertiary Care) அரசு மற்றும் அனுமதிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் குடும்பம் ஒன்றுக்கு ஆண்டுக்கு ₹ 5 இலட்சம் வரை மருத்துவ சிகிச்சைப் பெறத் தகுதியுள்ளவர்களாவர். இதன் மூலம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் 1,03,434 குடும்பங்கள் பயனாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உரிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை, 2,645 பயனாளிகளுக்கு ₹ 1.49 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இந்து அறநிலையத் துறை

46. இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மற்றும் கட்டுப்பாட்டில் வராத 45 திருக்கோயில்களைச் சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள ₹ 1.63 கோடி மானியக் கொடை வழங்கப்பட்டுள்ளது. சுமார் 1,024 சிறுபான்மை இஸ்லாமிய

மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையாக ₹ 25.79 இலட்சம் புதுச்சேரி வக்ஃபு வாரியம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. 6 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. திருக்கோயில்களின் ஆலய வரலாறு, பூஜை நேரம், குளங்கள் பற்றிய விவரம், தேர், ஆலயத்தொடர்பு விவரம், ஆலயத்தின் துணைக்கோயில்கள் பற்றிய விவரங்கள், மகான்கள் மற்றும் சித்தர்களுக்கு அர்ப்பணித்த கோயில்களின் முழு விவரங்கள் ஆகியவை அடங்கிய திருக்கோயில்கள் வழிகாட்டி கையேட்டின் இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டு புத்தகம் ஒன்று ₹ 300 வீதம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 10 புகழ்பெற்ற திருக்கோயில்களின் வரலாறு பற்றிய விரிவான ஆய்வு செய்வதற்கான பணிகள் புதுச்சேரி பிரெஞ்சு நிறுவனத்தின் மூலம் நடைபெற்று வருகின்றன.

தொழில்கள்

47. தொழில் வளர்ச்சியே ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு ஆகும் என்பதை அனைவரும் அறிவர். படித்த மற்றும் திறமையான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு இந்த அரசு புதிய தொழிற்சாலைகளைக் குறிப்பாக, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை வரவேற்பதில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. புதிய தொழிற் கொள்கையின்கீழ், தொழிற்சாலைகளைத் தொடங்கவும்,

உள்கட்டமைப்புகளை மேம்படுத்தவும் அதிகபட்சம் ₹ 1 கோடி வரை மானியம் வழங்கப்படுகிறது. இதுதவிர, புதுச்சேரிக்கு அதிக முதலீட்டினை ஈர்க்கும் வண்ணம் வட்டி மானியம், ஜெனரேட்டர் வாங்குவதற்கான மானியம் போன்ற பல்வேறு வகையான மானியங்களை அரசு அறிவித்துள்ளது.

48. புதியதாக தொழில் தொடங்குவோர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் மற்றும் தேவையான அனைத்து விவரங்களுடன் START-UP கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமான தொடக்கப் பயிற்சி முகாம் உள்நாட்டு வர்த்தகம் மற்றும் தொழில் மேம்பாட்டுத் துறையின் (DPIIT) பிரதிநிதிகள் மற்றும் துறை வல்லுநர்கள் மூலம் நடத்தப்பட்டது. பள்ளிக் கல்வியினைத் தொடர முடியாதவர்கள் முதல் பட்டதாரிப் பொறியாளர்கள் வரையிலானவர்களின் திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்பினை ஏற்படுத்த புதுச்சேரியிலுள்ள பிள்ளைச்சாவடி பகுதியில் இயந்திரக் கருவிக் கூடம் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

49. புதிய தொழிற் கொள்கை 2016 அறிவிக்கப்பட்டது முதல், மொத்தம் 64 திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு அவற்றில் 36 திட்டங்கள் ₹ 468.42 கோடி முதலீட்டில் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வேலையில்லா இளைஞர்கள் சுய

தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ், பல்வேறு வங்கிகள் மூலம் 155 தொழில்முனைவோர்கள் தொழில் தொடங்க ₹ 26.88 இலட்சம் மானியத்துடன் ₹ 1.18 கோடி வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின்கீழ் வங்கியின் மூலம் 27 தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க ₹ 50.04 இலட்சம் மானியத்துடன் ₹ 1.50 கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம்

50. மக்களாட்சி தழைத்து வளர நல்ல நிருவாகம் தேவை. தற்பொழுது தகவல் தொழில்நுட்பம் நல்ல நிருவாகத்திற்கு உறுதுணையாக அமைந்துள்ளது. அரசு சேவைகள் பொதுமக்களுக்கு மின்-ஆளுமை மூலம் எளிதிலும், வெளிப்படையான முறையிலும் கிடைக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். ஏற்கனவே, புதுச்சேரி அரசு பொது மக்களுக்கு 72 விதமான அரசு சேவைகளை மின்-ஆளுமை மூலம் வழங்கிவருகிறது. 2019 சூலை முதல் இணையதள சேவை மூலம் வருவாய்ச் சான்றிதழ், சாதி சான்றிதழ் போன்ற பல்வேறு சான்றிதழ்கள் வருவாய்த் துறை மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் 57,543 விண்ணப்பங்கள் பெறப்பட்டு இணையதள மூலம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. அன்றாட வாழ்வில் தகவல் தொழில்நுட்பத்தின் இன்றியமையாமைக்கு இதுவே

சான்றாகும். அரசு அதிகாரிகளுக்கு மின் சந்தையைக் (Government e-Marketing) கையாளுதல் மற்றும் மின் ஆளுகைப் பயிற்சி (Automation) வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

51. புதுவை மாநிலத்தில் பரந்த வலைப்பின்னல் மறுசீரமைப்பு திட்டம் (PSWAN) மற்றும் தேசியத் தகவல் உள்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் 271 அரசு அலுவலகங்களுக்கு இணையதள இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மின்–அலுவலகம் (e-office) என்னும் கோப்புகள் கண்காணித்தல் தொடர்பான மென்பொருள், தலைமைச்செயலகம் மற்றும் அனைத்துத் துறைகளின் தலைமை அலுவலகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கோப்புகள் கண்காணிப்பு மென்பொருள் பயிற்சி அளிக்கப்பட்டபின், மின்–அலுவலகம் மென்பொருள் முழுஅளவில் செயல்படுத்தப்படும். இதன் வாயிலாகக் கோப்பு உருவாக்கம், கடிதங்கள் மற்றும் குறிப்புகள் வரைதல், அனைத்துவகை இணைப்புகளுடன் கோப்புகள் சமர்பிப்பு ஆகியவை காகிதத் கோப்புகள் இல்லாமல் மின்னணு முறையில் இயங்கும்.

52. மின்னணு இந்தியா (டிஜிட்டல் இந்தியா) திட்டத்தின் ஒரு பகுதியாகவும் மற்றும் மத்திய அரசின் வழிமுறைகளை ஒட்டியும் சென்னையைச் சேர்ந்த M/s. ரெயில் டெல் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் “RAILWIRE” என்னும் இலவச Wi-Fi வசதியை பொது மக்கள் பயன்பாட்டிற்காக புதுச்சேரி, தொடர்வண்டி நிலையத்திற்கு வழங்கியுள்ளது. புதுச்சேரி மாநில தகவல்

மையம்-Phase-II புதுச்சேரி பொறியியல் கல்லூரி வளாகத்தில் உள்ள “டெக்னோபோலிஸ்” கட்டடத்தில் அமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது. இதற்கான பராமரிப்பு செலவு ₹ 7.64 கோடி ஆகும்.

தொழிலாளர் நலன்

53. புதுச்சேரி வேலை வாய்ப்பகத்திற்கு IS/ISO 9001:2008க்கான தரச் சான்றிதழ் அங்கீகாரம் 30-3-2010 முதல் இந்திய தரக்கட்டுப்பாட்டு அமைப்பு (Bureau of Indian Standards) மூலம் வழங்கப்பட்டு வந்தது என்பதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். இந்த தரச் சான்றிதழ் 7-2-2019 முதல், BSCIC என்ற தரச் சான்றிதழ் மேலாண்மை அமைப்பு மூலம் ISO 9001:2015க்கான தரச் சான்றிதழாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாட்சிப்பரப்பில் புதுச்சேரி வேலை வாய்ப்பகம் மட்டுமே இந்திய தர நிர்ணயச் சான்றிதழ் பெறும் முதல் அரசுத் துறை நிறுவனமாகும். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு வேலைவாய்ப்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. 2019ஆம் ஆண்டில் 5 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டதில், 3,783 நபர்கள் கலந்துகொண்டு அதில் 576 நபர்கள் முதல்கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில் 244 நபர்களின் பணி உறுதி செய்யப்பட்டது.

54. புதுச்சேரி அமைப்புச் சாராத் தொழிலாளர்கள் நலச் சங்கத்தில் 31-12-2019 வரை 33,705 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா, பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா மற்றும் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் (LIC) காப்பீட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் 18 முதல் 50 வயது வரை உள்ள இச்சங்கத்தின் 21,155 நபர்கள் பயனாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். 2019-20ல் 75 உறுப்பினர்களுக்கு மகப்பேறு உதவியாக மொத்தம் ₹ 2.48 இலட்சமும், ஈமச் சடங்கு உதவியாக 114 உறுப்பினர்களுக்கு மொத்தம் ₹ 7.38 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன. அரவிந்த் கண் மருத்துவமனை மூலம் சிறப்புக் கண் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு பயனாளிகளுக்கு கண் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன. மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளுக்கு மழைக்கால நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி

55. நமது சுற்றுப்புறத்தைத் தூய்மையாக பராமரித்து சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்துக்கொள்வது இன்றியமையாதது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதனைக் கருத்தில் கொண்டு, இவ்வாட்சிப்பரப்பில் ₹ 12.03 கோடி செலவில் 5,139 தனிப்பட்ட வீடுகளில் கழிப்பிடங்கள் இதுவரை

கட்டப்பட்டுள்ளன. இதேபோல் பொது மக்களுக்காக, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலம் ₹ 1.85 கோடி செலவில் 106 சமுதாயக் கழிப்பிடங்களும், 111 பொதுக் கழிப்பிடங்களும் கட்டப்பட்டுள்ளன.

56. சமூக அணிதிரட்டல் மற்றும் நிறுவன வளர்ச்சி திட்டத்தின்கீழ் 488 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ₹ 48.80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. சுய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் 1,177 தனி நபர்கள் மற்றும் குழு நிறுவனங்களுக்குக் கடனாக ₹ 3.73 கோடி வழங்கப்பட்டுள்ளது. திறன் பயிற்சி மூலம் வேலைவாய்ப்பினை வழங்கும் திட்டத்தின்கீழ் 1,607 திறன் பயிற்சி இல்லாத நகர்ப்புற ஏழைகளுக்கு திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

57. கோவிட்-19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் தடுப்பு நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக உள்ளாட்சி அமைப்புகள் சுகாதாரச் சூழலைப் பராமரிக்கும் பணியைச் செய்து வருகின்றன. இதற்காகத் தனியாக கிருமி நாசினிக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஷிப்டு முறை அடிப்படையில் சோடியம் ஹைப்போ குளோரைட் என்னும் கிருமி நாசினியை தொடர்புடைய எல்லைக்குள் தெளிப்பதற்குப் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். ஐந்து சோதனைச் சாவடிகளில் கிருமி நாசினி தெளிப்பதற்காகச் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் வருவாய் மற்றும் காவல்

துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படும். கொரோனா வைரஸ் தொற்று உள்ளதா என்று சந்தேகிக்கப்படும் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களைக் கண்காணிக்க 29 தனிமைப்படுத்தப்பட்ட மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. மேலும், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் வசிப்பதற்கு இடமில்லாதவர்கள் தங்குவதற்காக நான்கு இரவு விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

காவல்

58. இவ்வாட்சிப்பரப்பில், காவல் துறை, குற்றங்களைக் கண்டறிந்து அவற்றைக் கட்டுப்படுத்துவதில் தொடர்ந்து திறம்படச் செயல்பட்டு வருகிறது என்பது பெருமைக்குரிய செய்தியாகும். கடந்த நான்கு மாதங்களாக கோவிட்-19 நோய்த் தொற்றால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளிப்பதில் காவல் துறையினரின் அயராத மற்றும் தன்னலமற்ற சேவைகளுக்கு இத்தருணத்தில் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

59 இணையதளக் குற்றங்கள் உலகம் முழுவதிலும் மக்களுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனவே, தடயவியல் உள்கட்டமைப்பை வலுப்படுத்துவது இன்றியமையாததாகும். “கணினி இணையதளக் குற்றங்களிலிருந்து குழந்தைகள் மற்றும்

பெண்களைப் பாதுகாத்தல்” என்னும் திட்டத்தின்கீழ், புதுவையில் இணையதளத் தடயவியல் ஆய்வகப் பயிற்சி மையம் ஒன்றை ஏற்படுத்த மத்திய உள்துறை அமைச்சகம் மானியக் கொடையாக ₹ 4.54 கோடி வழங்கியுள்ளது. இது தொடர்பாக இணையதள ஆய்வகம் அமைக்கவும், இணையதளக் கருவிகள் மற்றும் கணினி சார்ந்த சாதனங்கள் வாங்கவும் ஆலோசகர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

துறைமுகம்

60. மத்திய அரசின் “சாகர்மாலா” திட்டத்தின்கீழ், புதுச்சேரி துறைமுகத்தை மேம்படுத்துவதற்காக சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT Madras) திட்ட மேலாண்மை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளது. சட்டரீதியான அனுமதிகள் கிடைத்த உடன் இந்தத் திட்டம் தொடங்கப்படும். காரைக்கால் துறைமுகம் 2019-20ஆம் ஆண்டில் 7.68 மில்லியன் டன் சரக்குகளைக் கையாண்டு ₹ 8.60 கோடி வருவாயை ஈட்டியுள்ளது. மீனவர் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு புதுச்சேரி துறைமுக முகத்துவாரத்தில் 1.20 இலட்சம் கன அடி மணல் தூர்வாரப்பட்டுள்ளது. சுயபயன்பாட்டுக் கடல் முனைய வசதி மூலம் காரைக்காலில் இருக்கும் M/s கெம்பிளாஸ்ட் சன்மார் நிறுவனம் 2019-20ஆம் ஆண்டில் 10,327 டன் திரவ சரக்குகளைக் கையாண்டு ₹ 10.20 இலட்சம் வருவாயை ஈட்டியுள்ளது.

பொதுப்பணிகள்

61. உள்கட்டமைப்பு மேம்பாடு மாநில வளர்ச்சி விகிதத்தை விரைவுபடுத்தும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். எனவே, இந்த அரசு சாலைகள், பாலங்கள், நீர்ப்பாசனம், வெள்ளத்தடுப்புப் பணிகள், குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்கள் போன்ற முக்கிய உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் /பராமரித்தலில் அதிக கவனம் செலுத்தி வருகிறது.

62. சாலைப் பணிகளின்கீழ், புதுச்சேரியில் 7 சாலைப் பணிகளுக்காக ₹ 19.80 கோடியும், காரைக்காலில் ஒரு சாலைப் பணிக்காக ₹ 11.82 கோடியும், ஏனாமில் ஒரு சாலைப் பணிக்காக ₹ 10.93 கோடியும் என ஒன்பது முக்கிய சாலைப் பணிகள் ₹ 42.55 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. புதுச்சேரியில் ₹ 4.38 கோடி செலவில் 2 முக்கிய கழிவுநீர்த் திட்டங்களும், ₹ 6.79 கோடி செலவில் குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ், இரண்டு அடுக்கு நீர்த்தேக்கத் தொட்டியின் கட்டுமானப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. ₹ 5.66 கோடி செலவில் காரைக்காலில் நீதி மன்ற வளாகத்தில் குடியிருப்புகளுடன் கூடிய பயன்பாட்டுப் பகுதி மற்றும் வழக்கறிஞர்கள் அறைகள் கட்டுமானங்களும் மற்றும் மாகியில் ₹ 5 கோடி செலவில் ஆற்றங்கரையோர நடைபாதையை

மேம்படுத்துவதற்கான மூன்றாம் கட்டப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. புதுச்சேரியில் உள்ள பழைய நீதி மன்றம் ₹ 9.60 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. காரைக்காலில் ₹ 9.90 கோடி செலவில் பிராவிடையனார் ஆற்றுப்பாலத்தின் மறுகட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பல சட்டச் சவால்களுக்குப் பிறகு, அரும்பார்த்தபுரம் மேம்பாலக் கட்டுமானப் பணிகள் தொடங்கி உள்ளன. இப்பணிகள், விரைவில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் திறந்துவிடப்படும். புதுச்சேரி சுதேசி காட்டன் மில் வளாகம் மற்றும் கருவடிகுப்பத்தில் புதியதாக கட்டப்பட்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகள் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவிடப்பட்டுள்ளது.

63. சுற்றுப்புறச்சூழலை சுத்தமாகப் பராமரிக்க, புதுச்சேரியில் உள்ள 14.15 கி.மீ. நீளம் கொண்ட 12 முழு நகர வடிகால் பாதையும் மற்றும் ஏனாமில் 6 வடிகால் பாதையும் சுத்தம் செய்யப்பட்டு அடைப்புகள் ஏதும் இல்லாத பாதாள வடிகால் பாதைகளாக உறுதி செய்யப்பட்டுள்ளது. பிரெஞ்சு இணைப்புக் கால்வாய் திட்டம் மேம்படுத்தப்பட்டு அதற்கு டாக்டர் Y.S. ராஜசேகர ரெட்டி பெயர் சூட்டப்பட்டு ஏனாம் மக்களின் குடிநீர் மற்றும் விவசாய பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

வருவாய்

64. கோவிட்-19 நோய்த் தொற்றுக்கு எதிராக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் பணி அளப்பரியதாகும். பேரிடர் மேலாண்மைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் வருவாய்த் துறை சிறந்து விளங்குகிறது என்பது அனைவரும் அறிந்ததே. வருவாயத் துறையின் தன்னலமற்ற அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய பணியை இத்தருணத்தில் நான் மனமார பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

65. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை இணையதள சேவைகளை 2019 சூலை, 1 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் தேவையான சான்றிதழ்களை வருவாய்த் துறையில் எளிதாகவும் மற்றும் விரைவாகவும் பெற முடியும். மேலும், இணையதளம் வாயிலாக வழங்கப்படும் சான்றிதழ்களின் உண்மைத் தன்மையை எளிதாக சரிபார்க்க முடியும். இதன் மூலம், போலிச் சான்றிகழ்களை தடுக்க முடியும். பொதுச் சேவை மையங்கள் மூலமாகவும், வருவாய்த் துறை நிர்ணயித்துள்ள கட்டணத்தில் பொது மக்கள் தேவையான சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்கலாம். அனைத்து சான்றிதழ்களும் டிஜிட்டல் கையொப்பத்துடன் வழங்கப்படுவதால் பொதுமக்கள் அதனை எவ்விடத்திலும் பாதுகாப்பாகப் பதிவிறக்கம் செய்யலாம்.

66. ஏழைக் குடும்பங்களுக்கான “ராஜீவ் காந்தி சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்”கீழ் நிதி உதவியாக 1,255 குடும்பங்களுக்கு ₹ 4.30 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டில் ஏனாம் மற்றும் மாஹே பிராந்தியத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பிற்கான நிவாரணம், மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக ₹ 1.68 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக, அரும்பார்த்தபுரம்-நடேசன் நகர் புறவழிச்சாலை மற்றும் மேம்பாலத்திற்கான இடத்தை கையகப்படுத்துவதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டு அந்த இடம் புதிய நில ஆர்ஜித சட்டம், 2013-ன் படி கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட புதுச்சேரி-வில்லியனூர் இடையிலான புறவழிச்சாலைப் பணிகள் துரிதப்படுத்தப்படும்.

67. நிலத்தை வாங்குபவர்கள் நிலத்தின் எல்லையை வரையறைப்படுத்தவும், அடையாளம் காண்பதற்கும் வசதியாக “உரிமம் பெற்ற நில அளவையாளர் மற்றும் வரைவாளர் விதிகளை” இந்த அரசு வெளியிட்டுள்ளது. வெகு நாட்களாகத் தீர்வுகாண முடியாமல் உள்ள உட்பிரிவு பட்டா மாற்றச் சிக்கல்களைத் (Sub-division) தீர்ப்பதற்கான முதல் படியாக, சாரம் வருவாய் கிராமத்தில் உள்ள அசோக் நகர் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒரு முழுமையான நில அளவைகள் மற்றும் நில உட்பிரிவு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. 483 பயனாளிகளுக்கு தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. காரைக்கால்

மாவட்டத்தில் 97 தகுதி வாய்ந்த நிலமற்ற ஏழைகள் கண்டறியப்பட்டு நில வழங்கல் சட்டம், 1975ன் படி இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி

68. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாதத் திட்டத்தின்கீழ், 7.65 இலட்சம் வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு 40,000 கிராமப்புற குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். மேலும், 627 வேலைகள் ₹ 15.98 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

69. கிராமப்புற சுகாதார இயக்கம் (Swachh Bharat) மூலம் இதுவரையில் 23,124 கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2019-20ஆம் ஆண்டில் மட்டும், 3,822 கழிப்பிடங்கள் கட்டிமுடிக்கப்பட்டன.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்

70. மாண்புமிகு தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் வழிகாட்டுதலின்படி, மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் நடத்திய செயல்திறன் தணிக்கையின் அடிப்படையில், புதுச்சேரி

மாசுக்கட்டுப்பாட்டுக் குழு, அனைத்து யூனியன் பிரதேசங்களுக்குள் முதல் இடத்தைப் பிடித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

71. பிளாஸ்டிக் அச்சுறுத்ததிலிருந்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்க ஒரேமுறை மட்டும் பயன்படுத்தப்படக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை (Single use plastic) புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் பயன்படுத்த 2-8-2019 முதல் புதுச்சேரி அரசு தடை செய்துள்ளது. இது நமது யூனியன் பிரதேசத்தை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள பெருமளவில் உதவி புரியும். தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர், காற்றின் மாசு போன்றவற்றின் அளவு மற்றும் தரம் ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணிப்பதற்காக தொடர் இணையதள உமிழ்வு கண்காணிப்புக் கருவி பதினான்கு தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்து

72. மாநில அளவிலான சாலைப் பாதுகாப்பு ஆலோசனை மற்றும் செயற்குழுவால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளால் சாலை விபத்துக்கள், மற்றும் விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகள் 2019ஆம் ஆண்டில் 39 விழுக்காடு அளவுக்கு கணிசமாகக் குறைந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து மகிழ்வர். அதாவது 2018ஆம் ஆண்டில்

1,593 மற்றும் 155 எண்ணிக்கையில் இருந்த சாலை விபத்துகள் மற்றும் விபத்தில் உயிரிழப்புகள் 2019ஆம் ஆண்டில் 1,389 மற்றும் 95 என்ற அளவில் குறைந்துள்ளது. இந்த முயற்சியினை மாண்புமிகு உச்சநீதிமன்றமும் பாராட்டியுள்ளது.

73. புதுச்சேரி மற்றும் மாஹேயில் உள்ள போக்குவரத்து அலுவலகங்களில், ஓட்டுனர் உரிமம் பெறுவதற்கு இணையதளம் மூலமாகத் தேர்வுகள் நடத்த அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கு இணையதள சேவைகளை வழங்குவதற்காக "வாகன்" மற்றும் "சாரதி" மென்பொருள் வகை 4.0 தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், உரிமையாளர் பெயர் மாற்றம், கடன் மூலம் பெற்ற வாகனங்கள், வாகன பதிவைப் புதுப்பித்தல், வாகனப் பதிவு நகல், ஓட்டுனர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் ஓட்டுனர் உரிமம் நகல் போன்ற பல்வேறு சேவைகளுக்கு பொது மக்கள் விண்ணப்பித்தல் மற்றும் கட்டணங்கள் செலுத்துவது ஆகிய அனைத்து நடைமுறைகளும் இணையதளம் வாயிலாகச் செய்ய முடியும்.

சுற்றுலா

74. புதுச்சேரி சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த சுற்றுலா இடமாகத் திகழ்வதுடன், இங்குள்ள அழகிய கடற்கரை, கைவினைப் பொருட்கள், ஆற்றுக் கழிமுகப்பகுதிகள், பாரம்பரியக் கட்டடங்கள் மற்றும் சமய வழிபாட்டுத் தலங்கள் போன்ற நிறைய

பொழுதுபோக்கு இடங்களுக்கும் பெயர் பெற்றுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். சுற்றுலா உள்கட்டமைப்பை மேம்படுத்த இந்த அரசு, மத்திய அரசின் நேரடித்திட்டங்களையும் சேர்த்து, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

75. இந்திய அரசு, மத்திய சுற்றுலா அமைச்சகத்தின் சுதேசி தர்ஷன் திட்டத்தின்கீழ் மத்திய அரசு நிதி உதவியுடன் ₹ 192 கோடி மதிப்பீட்டில் பல்வேறு சுற்றுலாக் கட்டமைப்புத் திட்டங்களை சுற்றுலாத் துறை மேற்கொண்டு வருகிறது. வார இறுதி நாட்களில் சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் சுற்றுலாத் தளம் என்ற நிலையிலிருந்து வாரம் முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் சுற்றுலாத் தளமாக புதுச்சேரியில் சுற்றுலா வளர்ச்சி பெற்று வருகிறது. துப்புராயப்பேட்டை, வீராம்பட்டினம், சின்ன வீராம்பட்டினம் சுண்ணம்பார் மற்றும் மணப்பட்டு பகுதிகளில் கடற்கரை மேம்பாட்டுப் பணிகள் இந்த ஆண்டில் நிறைவடைந்துள்ளன. மேலும் அத்திட்டங்கள் இயக்குதலுக்குத் தயார் நிலையில் உள்ளன. ஏனாம் பகுதியில் தீவு எண் 3ல் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளும், தாவரவியல் பூங்காவில் ஒலி-ஒளிக் காட்சியும் மேம்படுத்தப்பட்டுள்ளன. புதுச்சேரி நகரின் முக்கியமான தெருக்களின் மேம்பாட்டுப் பணிகள் (முதல் நிலை) தெருக்களின் பெயர்க்கான தகவல் அமைப்புகள், பாரம்பரிய பகுதியில் உள்ள பாரம்பரியக் கட்டடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களில் ஒளியூட்டுதல் போன்ற மேம்பாட்டுப் பணிகள்

நிறைவு செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டுள்ளது. பாரம்பரிய சுற்றுலாத் தொகுப்பில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகளான கடற்கரை நடைபாதையை அழகுபடுத்துதல் மற்றும் விரிவாக்கப் பணிகள் நகரின் முக்கிய தெருக்கள் மேம்பாட்டுத்திட்டம் (இரண்டாம் நிலை) நேரு வீதி மற்றும் பெரிய வாய்க்கால் மேம்பாட்டுத் திட்டம், முருங்கப்பாக்கத்தில் பிரெஞ்சு-தமிழ் கிராமம், பழைய துறைமுக கிடங்குகளை புதுப்பித்து மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டுவரும் திட்டம் மற்றும் பழைய சாராய வடிசாலை வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கலாச்சார மையம் போன்ற மேம்பாட்டுப்பணிகள், 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்யப்படும்.

76. புதுச்சேரி, நெல்லித்தோப்பில் உள்ள வின்னேற்பு அன்னை ஆலயம் மற்றும் ஏனாமில் உள்ள கிறிஸ்துவப் பேராலயம் ஆகியவற்றின் மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்து பொது மக்களின் வழிபாட்டிற்காக திறக்கப்பட்டுள்ளன. ஆன்மீகச் சுற்றுலா மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள், வில்லியனூர் அருள்மிகு கோகிலாம்பிகை சமேத திருக்காமீஸ்வரர் ஆலயம், புதுச்சேரி, திருக்காஞ்சியில் உள்ள அருள்மிகு கங்கைவராக நதீஸ்வரர் ஆலயம், காரைக்கால் திருநள்ளாற்றில் உள்ள திருக்குளங்கள் மேம்பாட்டுத்திட்டம், காரைக்கால் அம்பகரத்தூர் அருள்மிகு பத்ரகாளி அம்மன் ஆலய மேம்பாட்டுத் திட்டம் காரைக்கால் TR பட்டினத்தில்

மேற்கொள்ளப்பட்டுவரும் அருள்மிகு ஜடாயுபுரீஸ்வரர் ஆலய மேம்பாட்டுத்திட்டம், ஏனாம் பகுதியில் கோதாவரி ஆற்றங்கரையின் நடைபாதைகள் மற்றும் படித்துறைகள் மேம்பாட்டுப் பணிகள், அருள்மிகு வெங்கடேஸ்வர சுவாமி ஆலய மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு இந்த ஆண்டில் நிறைவு செய்யப்படும். சுற்றுலாப் பெருந்திட்டத்தின்கீழ், ஊசுட்டேரி மேம்பாட்டுப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் அரிக்கமேடு அருங்காட்சியகம் மற்றும் செயல் விளக்க மைய மேம்பாட்டுப்பணிகள் 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிறைவு செய்யப்படும். ஏனாம் கோபுரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பொழுதுபோக்குப் பூங்கா (முதல் நிலை) மேம்பாட்டுப் பணிகள் 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நிறைவு செய்யப்பட்டு இரண்டாம் நிலை மேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

77. இயற்கை சார்ந்த சுற்றுலா மேம்பாட்டுத் (Eco-Tourism) திட்டத்தின் ஒரு பகுதியாக புதுச்சேரியின் சதுப்புநில மாயாஜாலம்-“பாண்டி நெக்லஸ்” (Pondy Necklace) என்னும் சுற்றுலா அனுபவம் பெற முருங்கப்பாக்கம் கலை மற்றும் கைவினை கிராமத்திலிருந்து அரிக்கன்மேட்டிற்கு படகு சவாரி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் மூலம் ₹ 18.50 கோடி நிதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காக, கைபேசி செயலி (Mobile App.), இணைய வழி சுற்றுலாத் தகவல் வசதி (Online Tourist Information System)

ஆகியவை தேசிய தகவலியல் மையம் மூலமாக உருவாக்கப்பட்டுள்ளது. திறன் மேம்பாட்டுப் பயிற்சி திட்டத்தின்கீழ், சுயதொழில் சுற்றுலா வழிகாட்டிகளை (Freelance Tourist Guides) உருவாக்கும் நோக்கில் சுற்றுலா வழிகாட்டிகளுக்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

நகர மற்றும் கிராமத் திட்டமிடல்

78. பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின்கீழ் (PMAY) 6 திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டு பயனாளிகளின் பங்களிப்புடன் கூடிய கட்டுமானப் பணிகளின்கீழ் 1,811 வீடுகள் கட்டப்பட உள்ளன. இந்தத் திட்டத்தின்கீழ், ஒப்புதல் பெறப்பட்ட 12,912 வீடுகளில், 1,680 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 3,547 வீடுகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. வீடு கட்டுமானத் தொழில் நுட்பத்தினைப் போதிய அளவிற்குத் தெரிந்துகொள்ளும் வகையிலும், மேலும் நிதி சார்ந்த அறிவுரைகளை வழங்கவும் பயனாளிகளுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

79. புதுச்சேரியின் புவியியல் பகுதியின் அடிப்படையில் விரிவான வளர்ச்சித் திட்டத்தை அக்டோபர் 2019ல் அரசு வெளியிட்டுள்ளது. இதன் மூலம், பொருளாதார வளர்ச்சி மற்றும் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகள் பெருக வாய்ப்புகள் ஏற்படும். இதன் மூலம், நமது பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் நகரத்தின்

அமைப்பை மாற்றாமலும் சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாத்தும், திட்டமிடப்பட்டுள்ள பகுதிக்குள் வாழ்க்கைத்தரம் உயர வழி ஏற்படும்.

80. வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையில், திட்டமிடப்பட்டுள்ள பகுதிக்குள் அதிகமான நகர மையங்களை ஊக்கப்படுத்துதல் போன்ற திட்டங்கள் புதுச்சேரியின் 2036ஆம் ஆண்டுக்கான விரிவான வளர்ச்சி திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அதில் மதகடிப்பட்டு, நெட்டப்பாக்கம் மற்றும் பாகூரில் மூன்று வளர்ச்சி மையங்களும், மற்றும் தவளகுப்பம், கரிக்கலாம்பாக்கம், சேதராப்பட்டு மற்றும் காலாப்பட்டில் நான்கு வளர்ச்சி முனையங்களும் அமைக்கப்படும். இந்த மையங்கள் பொருளாதார உற்பத்தியிலும் மற்றும் அடிப்படை வசதிகளிலும் சுயஉதவி மையங்களாகச் செயல்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

81. இவ்வாட்சிப்பரப்பில் வசிக்கும் அட்டவணை இன மற்றும் பழங்குடி இன மக்களுக்கு சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டின் மூலம் சிறந்த வாழ்க்கைத்தரத்தை உறுதி செய்யும் பொருட்டு இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதனைக் கவனத்தில் கொண்டு இந்த அரசு பல்வேறு நலத் திட்டங்களை அட்டவணை இன மற்றும் பழங்குடியின மக்கள் நலனுக்காகச் செயல்படுத்தி வருகிறது.

82. 2019-20ஆம் ஆண்டில் அட்டவணை இன மற்றும் பழங்குடியின மக்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள சமூக பொருளாதார நலத்திட்டங்களுக்காக ₹ 131 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 560 அட்டவணை இனப் பயனாளிகளுக்கு முதல் தவணைத் தொகையாக ₹ 8.66 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், பாரத ரத்னா ராஜீவ் காந்தி கல்வீடு கட்டும் மானியத் திட்டத்தின்கீழ் நன்கு வடிவமைக்கப்பட்ட கல்வீடு கட்ட, இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைத்தொகையாக ₹ 3.10 கோடி நிதியுதவி 287 அட்டவணை இனப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 447 ஏழை அட்டவணை இனக் குடும்பங்களுக்கு பெண்கள் திருமண நிதி உதவியாக குடும்பம் ஒன்றுக்கு ₹ 75,000 வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், ₹ 3.34 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

83. குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைக்கும் பொருட்டு, 866 அட்டவணை இனத்தைச் சேர்ந்த கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு நிதி உதவியாக ₹ 18,000 வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ₹ 1.04 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. அட்டவணை இனக் குடும்பங்களைச் சேர்ந்த தொடர் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதந்தோறும் ₹ 3,000 நிதி உதவியாக 2,683 அட்டவணை இனப் பயனாளிகளுக்கு ₹ 4.62 கோடி வழங்கப்பட்டுள்ளது. கலப்புத்

திருமணங்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் 165 கலப்பு திருமணத் தம்பதியர்களுக்கு ₹ 2.50 இலட்சம் வழங்கப்பட்டதன் மூலம் மொத்தமாக ₹ 3.85 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

84. அட்டவணை இன ஏழைக் குடும்பத்தில் இறந்தவர்களின் இறுதிச்சடங்கினை மேற்கொள்ள நிதி உதவியாக ₹ 15,000 வழங்கப்படுகிறது. இதற்காக ₹ 1.58 கோடி செலவு செய்யப்பட்டு 1,055 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். 2019-20ஆம் ஆண்டில், ஆதிதிராவிடர் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வழங்கல், சமுதாய நலக்கூடம், கழிப்பறைகள் போன்ற அடிப்படை வசதிகள் ₹ 18.61 கோடி செலவில் செய்து தரப்பட்டுள்ளது.

சமூக நலன்

85. அனைத்து விதமான தடைகளையும் நீக்கி மாற்றுத்திறனாளிகளைப் பொது வாழ்வில் ஒருங்கிணைக்க இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளின் முன்னேற்றத்தை உறுதிபடுத்தும் விதமாக, மாற்றுத்திறனாளிகள் சட்டம் 2016-ன் பிரிவுகளை இந்த அரசு ஊக்கமுடன் செயல்படுத்தி வருகிறது.

86. இவ்வாட்சிப்பரப்பில் பல்வேறு நலத்திட்டங்களின்கீழ் 20,546 மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர். மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக 2019-20ஆம் ஆண்டில் ₹ 68.61 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்திர நிதி உதவித் திட்டம் அரசின் ஒரு முக்கியமான திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் 20,546 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர நிதி உதவியாக ₹ 1,500 முதல் ₹ 3,300 வரை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு, திருமண நிதி உதவி, கண்தான நிதி உதவி, ஈமச்சடங்கு நிதி உதவி, எரிபொருள் மானியம், போக்குவரத்துப்படி, பேருந்து இலவச அனுமதி அட்டை, கல்வி உதவித்தொகை, தீபாவளியை முன்னிட்டு இலவசப் பொருட்களுக்கு ஈடான உதவித்தொகை, செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு கல்விச் செலவினங்களை திரும்பச் செலுத்துதல் போன்ற பல திட்டங்கள் 2019-20ஆம் நிதி ஆண்டில் செயல்படுத்தப்பட்டன.

87. மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் மூலம் செயல்படுத்தப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு பிரத்தியேக அடையாள அட்டை வழங்கும் திட்டம் இவ்வாட்சிப்பரப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது வரை, 973 பிரத்தியேக அடையாள அட்டைகள் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ALIMCO, DRDA,

மற்றும் சென்னையில் உள்ள NIEPMD போன்ற அமைப்புகள் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்த பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் 349 பயனாளிகளுக்கு மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி, டெய்ஸி பிளேயர், பார்வையற்றோர்களுக்கான ஸ்டிக், பிரெயிலி கிட் மற்றும் வாக்கர் போன்ற முடநீக்கு உபகரணங்கள் ₹ 34.70 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

88. புதுச்சேரி சாரம் பகுதியில், மத்திய அரசின் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின்கீழ், ₹ 2.10 கோடி செலவில் மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு இல்லத்திற்காக புதியதாக சொந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. பாண்கேர் (PONCARE) சங்கத்தில் உறுப்பினராக உள்ள மூத்த குடிமக்களுக்கு முடநீக்கியல் சிகிச்சைக்காக புதுச்சேரி, அரியாங்குப்பம் மற்றும் காரைக்காலில் இயங்கும் முடநீக்கியல் மையத்தில், தேவைப்படும் மூத்த குடிமக்களுக்கு, தகுதி பெற்ற முடநீக்கியல் நிபுணர்களால் திங்கள் முதல் வெள்ளி வரை சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. ஜிப்மர் மற்றும் புதுச்சேரி அரசு பொது மருத்துவமனை இணைந்து காது, மூக்கு தொண்டை மற்றும் கண் சிகிச்சைக்காக சிறப்பு முகாம்களை நடத்தி இலவச கண் புரை அறுவைசிகிச்சைகள் செய்யப்பட்டன. இதில் தேவைப்படும் மூத்த குடிமக்களுக்கு கண் கண்ணாடிகள், காது கேட்கும் கருவிகள் மற்றும் கைத்தடிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்

89. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மக்களின் முன்னேற்றம் அவர்கள் கல்வி கற்றலுக்குண்டான வாய்ப்பைப் பெறுவதை பொறுத்தே அமைகிறது என்பதை இந்த அரசு அறிந்துள்ளது. இந்த ஆட்சிப்பரப்பின் மொத்த மக்கள் தொகையில், 60 விழுக்காட்டிற்கு மேலாக பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் சீர்மரபின சமூகத்தினர் உள்ளனர். இதனைக் கவனத்தில் கொண்டு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மாணவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கி அவர்கள் கல்வி கற்க அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. மேலும், தற்போது புதுச்சேரியில் மூன்று, மாணவ மாணவியர் விடுதிகளும், காரைக்காலில் இரண்டும் மற்றும் ஏனாமில் ஒன்றும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்களுக்காக இயங்கி வருகின்றன. இதன் மூலம் இந்த சமூகத்தைச் சார்ந்த 235 மாணவ / மாணவியர் பயனடைகின்றனர். 2,084 பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மெட்ரிக் வகுப்புக்கு முற்பட்ட படிப்புக்கான உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். இதேபோல், 1,391 பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மெட்ரிக் வகுப்புக்கு பிற்பட்ட படிப்புக்கான உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

90. மக்கள் தலைவர் தியாகி வி. சுப்பையா விருதுத் திட்டத்தின்கீழ், பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 17 பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பணப் பரிசு வழங்கப்பட்டது. இதேபோல், 2019-20ல் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த, மெட்ரிக் வகுப்புக்கு முற்பட்ட படிப்புக்கான உதவித் திட்டத்தில் 1,640 மாணவர்களும், மெட்ரிக் வகுப்புக்கு பிற்பட்ட 124 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

91. மகளிர் மற்றும் குழந்தைகளின் நிலையான வளர்ச்சிக்கும் மற்றும் அவர்கள் நலனுக்காகவும் பல்வேறு நலத்திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

92. ஏழைப் பெண்களின் திருமண உதவித் தொகையாக 652 பயனாளிகளுக்கு தலா ₹ 25,000 வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் 2019-20ல் விதவைகளின் மகள் திருமணத்திற்கு உதவித் தொகையாக 223 பயனாளிகளுக்கு தலா ₹ 25,000 வழங்கப்பட்டுள்ளது. எட்டாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் ஒரு பெண் குழந்தை மட்டும் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 78 பெண் குழந்தைகளின் பெயரில் ₹ 25,000க்கு தேசிய சேமிப்பு பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. 38 கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ₹ 6,000 நிதி

உதவி வழங்கப்பட்டுள்ளது. குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்ட ஒரு பெண்/இரண்டு பெண் குழந்தைகள் வைத்துள்ள 244 ஏழைப் பெற்றோர்களுக்கு உதவித் தொகையாக ₹ 30,000 நிரந்தர வைப்பு நிதி வழங்கப்பட்டுள்ளது.

93. இந்த அரசால் "முதியோர் ஓய்வூதியத் திட்டம்" தொடர்ந்து ஊக்கமுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதியோர்கள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் திருநங்கைகள் ஆகியோரை உள்ளடக்கி மொத்தம் 1,54,847 பயனாளிகள் மாதாந்திர உதவித் தொகை பெறுகின்றனர். இதற்காக, 2019-20ஆம் ஆண்டில் ₹ 348.64 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும், 1,993 இறந்த ஓய்வூதியதாரர்களின் ஈமச்சடங்கினைச் செய்வதற்கான நிதி உதவியாக மொத்தம் ₹ 1.99 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

94. "ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவைகள்" திட்டத்தின்கீழ் (ICDS) பதிவு செய்யப்பட்டுள்ள 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி / பாலூட்டும் தாய்மார்களுக்கு, வருடத்தின் 365 நாட்களுக்கும் ஊட்டச்சத்து மிக்க இணை உணவு 855 அங்கன்வாடி மையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. 2019-20ஆம் ஆண்டில் இத்திட்டத்துக்காக ₹ 10.83 கோடி செலவு செய்யப்பட்டு 25,939 குழந்தைகள் மற்றும் 9,458 தாய்மார்கள் பயனடைந்துள்ளனர்.

95. பிரதம மந்திரியின் மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் ₹ 3.59 கோடி செலவு செய்யப்பட்டு 5,469 கருவுற்ற மற்றும் பாலுட்டும் தாய்மார்கள் பயனடைந்துள்ளனர். மத்திய அரசின், தேசிய மழலையர் காப்பக திட்டத்தின்கீழ் குழந்தைகளின் நலனை மேம்படுத்தும் நோக்கத்தோடு அரசு சாரா அமைப்புகள் நடத்தும் 95 மழலையர் காப்பகங்களுக்கு 2019-20ல் மானியக் கொடையாக ₹ 2.68 கோடி வழங்கப்பட்டுள்ளது.

96. ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அரசு சாரா அமைப்புகள் மூலம் நடத்தப்படும் 25 குழந்தை பராமரிப்பு நிறுவனங்களுக்கு மானியக் கொடையாக ₹ 4.23 கோடியும் மற்றும் 6 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ₹ 1.34 கோடியும், மேற்கண்ட காப்பகங்களில் தங்கி இருக்கும் 930 குழந்தைகளின் பராமரிப்பு செலவுக்காக வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு திட்டமான "ஸ்வதார் கிரஹா" திட்டம் பெண்களின் கடினமான சூழ்நிலைகளில் உணவு, தங்குமிடம், உடை மற்றும் உரிய பாதுகாப்பினை வழங்குகிறது. இத்திட்டம் அரசு சாரா அமைப்புகள் மூலம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிறைவுரை

97. எனது உரையின் நிறைவாக, அரசின் அனைத்து நிதி ஆதாரங்களையும் பயன்படுத்தி, வறுமையை நீக்கி, இவ்வாட்சிப்பரப்பை வளமிக்கதாக்கும் வழிவகைகளை

உருவாக்குவதில் இந்த அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது என்று நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதி கூற விரும்புகிறேன். அரசின் முன் உள்ள அனைத்துச் சவால்களையும் உங்களுடைய மனமார்ந்த முழு ஒத்துழைப்புடன், இந்த அரசு எதிர்கொண்டு நிலையான வளர்ச்சியை எதிர்வரும் காலங்களில் எட்டும் என நான் உறுதியுடன் நம்புகிறேன். எதிர்பாராத விதமாக உலகம் முழுவதிலும் கோவிட்-19 வைரஸ் பரவலால் ஏற்பட்டுள்ள சுகாதார நெருக்கடியின் தாக்கம் இவ்வாட்சிப்பரப்பிலும் ஏற்பட்டுள்ளது. இந்த எதிர்பாராத நெருக்கடியில் இருந்து அரசு எடுத்துவரும் தொடர் நடவடிக்கைகளின் காரணமாக மீண்டும் உங்கள் அனைவரின் ஒத்துழைப்புடன் இந்த அரசு வெற்றிநடை போடும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

98. இறுதியாக, கோவிட்-19 பரவலால், பொருளாதார ரீதியாகத் துயருற்றிருக்கும் ஏழை, எளிய மக்களின் துயரத்தைப் போக்குவதற்கு அரசு எடுத்துள்ள முயற்சிகள் மட்டுமல்லாமல், தங்கள் தொகுதிகளில் சொந்த செலவில் களத்தில் மக்களோடு மக்களாக நின்று தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் மக்கள் பணியில் தங்களைச் செவ்வனே ஈடுபடுத்திப் பல்வேறு மக்கள் நலத்திட்ட உதவிகளைச் செய்து மகத்தான சமூகப் பங்களிப்பை ஆற்றிவரும் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

99. இந்த மாண்புமிகு அவையின் கூட்டத் தொடரில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஆக்கப்பூர்வமான விவாதங்களுடன் தங்கள் மேலான பரிந்துரைகளையும், கருத்துக்களையும் இந்த அரசுக்கு வழங்குவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நன்றி !

வணக்கம் !

வாழிய புதுச்சேரி !

வாழ்க பாரதம் !

வடிவமைப்பு மற்றும் அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி – 605 009.